

சென்னை ராயபுரம் மண்டலத்தில் உள்ள சென்னை மேல்நிலைப்பள்ளியில் கட்டப்பட்டு வரும் கூடுதல் கட்டிட பணிகளை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இதில் துணை ஆணையர் கட்டா ரவி தேஜா, மண்டல குழு தலைவர் ஸ்ரீராமுலு கலந்து கொண்டனர்.



**வடசென்னை வடக்கு கிழக்கு மாவட்ட செயலாளர் ஆர்.எஸ்.ராஜேஷ் அதிமுக ஆட்சி அமைய வேண்டி, தண்டையார் பேட்டை பகுதியில் உள்ள 153,90,91- ஆகிய பாகத்தில் உள்ள 300குடும்பங்களிடம் வீடு, வீடாக சென்று மக்களை காப்போம் - தமிழகத்தை மீட்போம் எடப்பாடியாரின் எழுச்சி பயணத்தை முன்னெடுக்கும் வகையில் ஸ்டிக்கர் ஒட்டி பிரசுரங்களை வழங்கினார். இதில் எஸ்.நாகரத்தினம், நேதாஜி கணேசன், கணேசன், ஓ.ஏ.ரவிராஜன், எல்.எஸ். மகேஷ் குமார், துரை தனசேகர் உட்பட பலர் உடன் இருந்தனர்.**



**முதல்வர் மு.க.ஸ்டாலின் ரூ.66 கோடியே 78 லட்சம் மதிப்பீட்டில் சென்னை மாநகருக்கு செம்பரம்பாக்கம் நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து கூடுதலாக நாளொன்றுக்கு 265 எம்எல்டி குடிநீர் வழங்கும் திட்டத்தினை தொடங்கி வைக்கவுள்ளதை முன்னிட்டு, அதற்கான விழா முன்னேற்பாடு பணிகளை நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு பார்வையிட்டு ஆய்வு செய்தார். இவ்வாய்வின்போது, திருவள்ளூர் மாவட்ட கலெக்டர் மு.பிரதாப் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.**

# சென்னையில் நடந்த நிகழ்ச்சியில் 768 சுய உதவிக்குழுக்களை சேர்ந்த 13670 உறுப்பினர்களுக்கு ரூ.105.60 கோடி வங்கி கடன்

## அமைச்சர்கள் சேகர்பாபு,மா.சுப்பிரமணியன் வழங்கினார்



**சென்னை,செப்.19**

சென்னை மாவட்டத்தைச் சார்ந்த பயனாளிகளுக்கு தியாகராயநகர். சர்.பி.டி. தியாகராயர் அரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு ஆகியோர் 768 சுய உதவிக் குழுக்களை சேர்ந்த 13670 உறுப்பினர்களுக்கு ரூபாய் 105.60 கோடி ரூபாய் வங்கி கடன் இணைப்பு மற்றும் சுய உதவிக் உறுப்பினர்களுக்கு அடையாள அட்டையும் வழங்கினார்கள்.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சுய உதவிக் குழு இயக்கத்தை மாநிலம் முழுவதும் பரவலாக்கி கல்வி வேலைவாய்ப்பு பொருளாதார சுய சார்பு தன்மை மூலம் பெண்களின் நிலையை மேம்பாடு அடையச் செய்யும் நோக்கத்துடன் செயல்பட்டு வருகிறது இந்நிறுவனம் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மற்றும் தமிழ்நாடு ஊரக புத்தாக்க திட்டம் ஆகிய மூன்று முக்கிய திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

சென்னை மாவட்டத்தில் 2025-26 ஆம் ஆண்டு சுமார் 4395 சுய உதவி குழுக்களுக்கு 401 கோடி 48 லட்சம் வங்கி கடனாக வழங்கப்பட்டு நகர்ப்புற ஏழை எளிய மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு வழி வகை செய்யப்பட்டுள்ளது.

மேலும், இன்றைய தினம் வழங்கப்பட்ட மகளிர் சுய உதவிக்குழு அடையாள அட்டையின் மூலம் பேருந்துகளில் 25 கிலோ சுய உதவிக் குழு உற்பத்தி பொருட்களை விலையின்றி எடுத்துச் செல்லலாம். கடன்களுக்கு முன்னுரிமை (பயிர் கடன், கால்நடை கடன், சிறு வணிக கடன், தொழில் முனைவோர், மாற்றுத்திறனாளிகள் கடன்), கோ-ஆப்டெக்ஸில் 5 சதவீத தள்ளுபடி - ஆவின் கடைகளில், இ-சேவை மையங்களில் 10% சேவை கட்டணம் குறைவு மற்றும் மகளிர் சுய உதவிக்குழு அடையாள அட்டை முதலமைச்சரின் மருத்துவ காப்பீடுத் திட்டத்தின் அட்டைக்கு முதன்மை ஆதாரமாக எடுத்துக்கொள்ளப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு மேயர்.ஆர்.பி.ரியா, தென் சென்னை பாராளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் சட்டமன்ற உறுப்பினர்கள்.கருணாநிதி (தியாகராயநகர்), அரவிந்த் ரமேஷ் (சோழிங்கநல்லூர்), ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா (விருகம்பாக்கம்), சென்னை மாவட்ட கலெக்டர் .ரஷ்மி சித்தார்த் ஜகடே.பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையர் (வருவாய் மற்றும் நிதி) .பிரித்திவ்ராஜ்.மற்றும் மாமன்ற உறுப்பினர் திரு.ஏழுமலை உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**வாகனங்கள் ஓட்டும் போது செல்போன் பேசாதே... பேசுவது எமனாக இருக்கலாம்**

### மாமன்ற அதிமுக கவுன்சிலர் கார்த்திக் ஏற்பாட்டில்

# திருவொற்றியூர் ராஜாஜி நகரில் கல்லூரி மாணவ மாணவிகளுடன் தீவிர துப்புரவு பணி



**திருவொற்றியூர் செப்.19**

சென்னை மாநகராட்சி திருவொற்றியூர் மண்டலம் 7வது வட்டத்திற்கு உட்பட்ட இராஜாஜி நகர்மாணிக்கவேல் தெரு,நேருதெரு, இந்திரா காந்தி தெரு ஆகிய பகுதியில் அதிமுக மாமன்றகவுன்சிலர் டாக்டர்கே.கார்த்திக் ஏற்பாட்டில் எம்.எஸ்.டபுள்யு சமுதாய கல்லூரி மாணவ மாணவிகளுடன் தீவிர துப்புரவுதூய்மை பணிநடைபெற்றது.

**துப்புரவு பணி**

இவர்களுடன் சுகாதாரத் துறை அலுவலர்கள் அதிமுக வட்ட செயலாளர் எம்.கண்ணன், முன்னாள் வட்ட செயலாளர் எஸ்.ஸ்டிபன், கிழக்கு பகுதி இளைஞர் அணி செயலாளர் எட்வின்,அம்மா பேரவை செயலாளர் சுப்பிரமணியம், இளைஞர் பாசறை செயலாளர் ராஜேஷ், இளைஞர் அணி இணை செயலாளர் அரவிந்த், அருண்குமார், எம்ஜிஆர் மன்ற இணை செயலாளர் பாளையக்காரர், மகளிர் அணி இணை செயலாளர் வத்சலா,அண்ணாமலை நகர் முத்து, பொன்.செல்வம், ரஞ்சித் சக்தி ஆகியோர் கலந்து கொண்டனர் .

# தாய்-மகளுக்கு மிரட்டல் விடுத்த வீட்டு உரிமையாளர் கைது

**சென்னை செப் 19-**

வீடு புகுந்து கல்லூரி மாணவிக்கும் அவரது தாய்க்கும் மிரட்டல் விடுத்த உரிமையாளரை கைது செய்து சிறையில் அடைத்தனர். சென்னை வியாசர்பாடி சஞ்சய் நகர் 2வது தெருவில் வாடகை வீட்டில் பெற்றோருடன் வசித்துவரும் 18 வயது பெண் பாரிமுனையில் உள்ள கல்லூரியில் 2ம் ஆண்டு படிக்கிறார்.

வீட்டின் உரிமையாளர் கணேசன் (45) என்பவர் அடிக்கடி மதுபானம் அருந்திவிட்டு வந்து வாடகைக்கு குடியிருப்பவர்களிடம் தகராறு செய்து வந்துள்ளதாக தெரிகிறது.

இந்த நிலையில், நேற்று முன்தினம் இரவு குடிபோதையில் வந்த கணேசன், அரைகுறை ஆடையுடன் மாணவியின் வீட்டுக்குள் புகுந்து தகராறு செய்துள்ளதாக தெரிகிறது. அப்போது கணேசன், ''உங்கள் வீட்டு நாய் குரைப்பதால் எனக்கு தூக்கம் வரவில்லை' எனக் கூறி தகாதவார்த்தைகளால் பேசி மிரட்டல் விடுத்துள்ளார்.

இதன்பின்னர் வீட்டில் உள்ள மின்மோட்டார் சுவிட்சை உடைத்துவிட்டு சென்று விட்டார்.இதுசம்பந்தமாக பாதிக்கப்பட்டவர்கள் கொடுத்த புகாரின்படி, எம்கேபி.நகர் இன்ஸ்பெக்டர் வீராசாமி தலைமையில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி, கணேசனை கைது செய்தனர். மாணவி, அவரது தாய் ஆகியோருக்கு தொல்லை கொடுத்தது தொடர்பாக வன்கொடுமை தடுப்பு சட்டம் உள்ளிட்ட சட்டப்பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்துள்ளனர். பின்னர் கணேசனை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

# சென்னையில் இந்தாண்டு இறுதிக்குள் 5 புதிய பஸ் நிலையங்கள் திறக்க திட்டம்: சி.எம்.டி.ஏ அதிகாரிகள் தகவல்

**சென்னை செப் 19-**

இந்தாண்டு இறுதிக்குள் ஐந்து புதிய பேருந்து முனையங்களை திறக்க திட்டமிடப்பட்டு, அவை பப்ளிக் – பிரைவேட் பார்ட்னர்ஷிப் முறையில் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தகவல் தெரிவித்துள்ளனர். தமிழகத்தில் பொது போக்குவரத்து வசதிகளை அதிகப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. ஏனெனில் மக்கள்தொகை, வாகன நெரிசல், சுற்றுச்சூழல் மாசுபாடு உள்ளிட்டவை படிப்படியாக அதிகரித்த வண்ணம் உள்ளன.

இந்தநிலையில் சென்னையில் இந்தாண்டு இறுதிக்குள் ஐந்து புதிய பேருந்து நிலையங்கள் திறக்க திட்டமிடப்பட்டுள்ளன.அதில் முதற்கட்டமாக அம்பத்தூரில் புதிய பேருந்து முனைய திட்டமானது 1.6 ஏக்கரில் ரூ.17.34 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இதில் 26,000 சதுர அடி கட்டிடத்தில் எம்.டி.சி நிர்வாக அலுவலகம் மற்றும் 20-க்கும் மேற்பட்ட பேருந்து நிறுத்தங்கள் கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளன. இதனை அடுத்த மாதம் முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்கின்றார். அதே போல், செங்கல்பட்டு பேருந்து நிலையம் ரூ.97 கோடி செலவிலும், முல்லை நகர் பேருந்து நிலையம் ரூ.8.1 கோடி மதிப்பீட்டிலும் கட்டி முடிக்கப்பட்டு அடுத்த மாதம் இறுதியில் திறக்கப்பட உள்ளது.இதுமட்டுமின்றி, நவம்பரில் கண்ணதாசன் நகர் பேருந்து நிலையம் ரூ.14.36 கோடியிலும், தண்டையார்பேட்டை பணிமனை நவீனமயமாக்கல் ரூ.31.42 கோடி மதிப்பீட்டிலும் திறக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், பெரம்பூர், ராயபுரம், கொளத்தூர் மற்றும் துறைமுகம் ஆகிய இடங்களில் ரூ.2 கோடி செலவில் 4 சிறிய பேருந்து நிறுத்தங்களும் டிசம்பருக்குள் தயாராகி விடும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து சி.எம்.டி.ஏ அதிகாரிகள் கூறியதாவது: பயணிகளின் நலன் கருதி அவர்களின் வசதிக்கு ஏற்ப பேருந்து நிலையங்கள் மற்றும் நிறுத்தங்களை மறுவடிவமைப்பு செய்து வருகின்றோம். அந்தவகையில் வரும் டிசம்பருக்குள் ஐந்து பேருந்து நிலையங்கள் திறக்க ஏற்பாடுகளை மும்முரமாக செய்து வருகின்றோம். இதில், முதல் முறையாக தனியார் நிறுவனங்கள் பேருந்து நிலையங்களை 3 வருடங்களுக்கு பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள உள்ளனர்.அதாவது, பப்ளிக் – பிரைவேட் பார்ட்னர்ஷிப் முறையில் செயல்படுத்த உள்ளோம். இதன் மூலம், சுத்தம் செய்தல், வருடாந்திர பழுது பார்த்தல், வர்ணம் பூசுதல் மற்றும் கழிப்பறை பராமரிப்பு போன்ற பணிகளை செய்வார்கள். கடைகள், வாகன நிறுத்துமிடம் மற்றும் விளம்பரங்கள் மூலம் அவர்கள் வருமானம் பெறுவார்கள்.இந்த முறை மூலம் மாநகராட்சி நடத்தும் பேருந்து நிலையங்களில் ஏற்படும் பிரச்சனைகளை தடுக்கலாம். இவ்வாறு அவர் பேசினார்.

# போக்குவரத்து விதிமீறல் என லிங்க் அனுப்பி மோசடி: பொதுமக்களுக்கு காவல்துறை எச்சரிக்கை

**சென்னை செப் 19-**

போக்குவரத்து விதிமீறல் தொடர்பான லிங்க் அனுப்பி மோசடி நடப்பதாக காவல் துறை எச்சரிக்கை விடுத்துள்ளது. E-challan.apk என்று வரும் லிங்க்-ஐ யாரும் கிளிக் செய்ய வேண்டாம் என்று காவல் துறை அறிவுறுத்தியுள்ளது. போக்குவரத்து விதிமீறல் என லிங்க் அனுப்பி செல்போன், வாட்ஸ் ஆப் ஹேக் செய்யப்படுகிறது. மோசடி லிங்க் அனுப்பி பணமும் பறிக்கப்படுவதால் கவனமாக இருக்க காவல்துறை அறிவுறுத்தியுள்ளது.நீங்கள் பைக் அல்லது கார் உரிமையாளர் எனில், உங்களுக்கு ''பரிவாஹன் இ-சலான்'' என்கிற பெயரில் மெசேஜ் வரும். பெரும்பாலும் இது வாட்ஸ்அப் வழியாகத்தான் வரும். நீங்கள் போக்குவரத்து விதிகளை மீறிவிட்டதாகவும், அபராதம் செலுத்த வேண்டும் என்றும் அந்த மெசேஜில் தெரிவிக்கப்பட்டிருக்கும். வழக்கமாக போக்குவரத்து காவல்துறை அனுப்பும் மெசேஜ்களில் கூகுள் ப்ளே ஸ்டோரில் அங்கீகரிக்கப்பட்ட 'நெக்ஸ்ட் ஜெனரேஷன் இபரிவாஹன்' (mParivahan) ஆப் லிங்க் இருக்கும்.இந்த லிங்கை நீங்கள் கிளிக் செய்தால், உடனடியாக பிளே ஸ்டோருக்கு போகும். பின்னர் இந்த ஆப்-ஐ இன்ஸ்டால் செய்து, அபராத தொகையை கட்டலாம். ஆனால், போலியான மெசேஜில், APK அப்ளிகேஷனின் லிங்க் இருக்கும். இது கூகுள் ப்ளே ஸ்டோரில் கிடைக்காது.க்ரோம் மூலம் இன்ஸ்டால் செய்ய வேண்டி இருக்கும். அதை நீங்கள் உண்மை என நினைத்து இன்ஸ்டால் செய்தால் உங்கள் மொபைலுக்கு வரும் எஸ்.எம்.எஸ்., தொடர்பு எண்கள் மற்றும் வங்கி விவரங்களை அணுக அனுமதி கேட்கும்.எல்லாவற்றிற்கும் ஓகே கொடுத்தால், ஓ.டி.பி.களைக் அனுப்பி, மோசடியான பணப் பரிமாற்றங்களைச் செய்து வங்கி கணக்கில் உள்ள பணத்தை எடுத்துவிடுவார்கள். வங்கி கணக்கில் பணம் காலியான பின்னர்தான், தான் ஏமாற்றப்பட்டிருக்கிறோம் என்பதை பாதிக்கப்பட்ட நபர்கள் தெரிந்துக்கொள்வார்கள்.எனவே போக்குவரத்து விதிமீறல் அபராதங்களை, அரசின் அதிகாரப்பூர்வ வலைத்தளங்கள் அல்லது கூகுள் பிளே ஸ்டோரில் கிடைக்கும் அரசு செயலி மூலம் மட்டுமே கட்ட வேண்டும் சரிபார்க்க வேண்டும் என்று காவல்துறை அறிவுறுத்தியுள்ளது. APK அப்ளிகேஷன்களை ஒருபோதும் இன்ஸ்டால் செய்ய வேண்டாம் என்றும் அவர்கள் எச்சரித்துள்ளனர். எனவே, தேவையற்ற தொடர்புகளையோ அல்லது போலியான வலைத்தளங்களையோ நம்ப வேண்டாம் என்று பொதுமக்களுக்கு போலீசார் வலியுறுத்தியுள்ளனர்.

**குடிபோதையில் வாகனத்தை ஓட்டாதே! குடும்பத்தை சோகத்தில் ஆழ்த்தாதே!!**



**வளசரவாக்கம் மண்டலம் ஆலப்பாக்கம் பிரதான சாலையில் மழை நீர் வடிகால்வாய் அமைப்பதற்காக போடப்பட்ட பூஜையை மாமன்ற உறுப்பினர் ரமணி மாதவன் துவக்கி வைத்தார்.உடன் வட்ட செயலாளர் எஸ்.ஜி.மாதவன், பிருந்தாவனன்,இ.வேணு,ரவிக்குமார்,கோகுலகிருஷ்ணன், உள்ளனர்.**



**வளசரவாக்கம் மண்டலம் 155 வது ராமாபுரம் சென்னை தொடக்கப்பள்ளியில் புதிதாக கட்டப்பட்டு வரும் பள்ளியின் கட்டிடத்தினை மாமன்ற உறுப்பினர்கள் ராமாபுரம் வ.செல்வகுமார், கே.ராஜூ ஆகியோர் ஆய்வு செய்தனர் உடன்வட்ட செயலாளர் ஆ.செல்வம் மற்றும் பலர் உள்ளனர்.**

# சேத்துப்பட்டு பகுதியில் மெத்தம்பெட்டமைன் விற்ற 3 பேர் கைது

**சென்னை செப் 19-**

சென்னையில் போதை பொருள் தடுப்பு நுண்ணறிவுப்பிரிவு காவல்குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில், காவல்குழுவினர் மற்றும் சேத்துப்பட்டு காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் ஒருங்கிணைந்து, சேத்துப்பட்டு, ஹாரிங்டன் ரோடு, 13வது அவென்யூ அருகே கண்காணித்து, அங்கு சந்தேகப்படும்படி நின்றிருந்த நபரை விசாரணை செய்து, அவரை சோதனை செய்தபோது, அவர் மெத்தம்பெட்டமைன் என்ற போதைப்பொருள் மறைத்து வைத்திருந்தது தெரியவந்தது.

அதன்பேரில், சேத்துப்பட்டு காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, போதைப்பொருள் வைத்திருந்த எதிரி 1.முகமது ரபி, என்பவரை கைது செய்தனர். மேலும் அவர் கொடுத்த தகவலின்பேரில் மேற்படி மெத்தம்பெட்டமைன் வைத்திருந்த எதிரிகள் 2.ஜெயந்தி, 3. மணிமாறன், உட்பட மொத்தம் 3 நபர்களை கைது செய்தனர். அவர்களிடமிருந்து 8 கிராம் மெத்தம்பெட்டமைன் மற்றும் 5 செல்போன்கள் பறிமுதல் செய்யப்பட்டது. விசாரணையில் எதிரி மணிமாறன் மீது ஏற்கனவே 1 குற்ற வழக்கு உள்ளது தெரியவந்தது.கைது செய்யப்பட்ட எதிரிகள் மூவரும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி சிறையில் அடைத்தனர்.

# வரதட்சணை கொடுமை வழக்கில் கணவருக்கு வழங்கப்பட்ட சிறை தண்டனை

## உச்சநீதிமன்றம் உறுதி செய்தது

**சென்னை செப் 19-**

வரதட்சணை கொடுமை வழக்கில் கணவருக்கு வழங்கப்பட்ட சிறை தண்டனையுடன் கூடிய அபராதத்தை உச்ச நீதிமன்றம் உறுதி செய்தது. குற்றவாளி சிறையில் அடைக்கப்பட்டார்.சென்னை, செம்பியம் பகுதியில் வசித்து வந்த கௌசர்பாத்திமா, என்பவரை அவரது கணவர் யூசுப், என்பவர் வரதட்சணை கேட்டு, வீட்டை விட்டு, வெளியே அனுப்பி கொடுமைபடுத்தியதாக கடந்த 2011ம் ஆண்டு, செம்பியம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின்பேரில், வரதட்சனை தடைச் சட்டம், மற்றும் இந்திய தண்டனை சட்டப் பிரிவுகளின் கீழ், வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு, உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது. செம்பியம் அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினரால் முறையாக விசாரிக்கப்பட்டு, இறுதி அறிக்கை தயார் செய்து, எழும்பூர், தலைமை பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து வழக்கு விசாரணை நடைபெற்று வந்த நிலையில், நீதிமன்ற வழக்கு விசாரணை முடிவடைந்து கடந்த 13.10.2015 அன்று இவ்வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டது. மேற்படி வழக்கில் எதிரி யூசுப் என்பவர் மீது குற்றம் நிரூபிக்கப்பட்டதால், குற்றவாளி யூசுப் என்பவருக்கு 6 மாதங்கள் சிறை தண்டனை மற்றும் ரூ.3,000/- அபராதமும், அபராதம் செலுத்த தவறினால் மேலும் ஒரு மாதம் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் எழும்பூர், தலைமை பெருநகர குற்றவியல் நடுவர் அவர்கள் கடந்த (13.10.2015) அன்று தீர்ப்பு வழங்கினார். பின்னர் எதிரி யூசுப் உயர்நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ததின்பேரில், உயர்நீதிமன்றத்தால் கடந்த (14.08.2019) அன்றும், உச்சநீதிமன்றத்தால் கடந்த (08. ந் தேதி அன்றும், எதிரியின் மனு தள்ளுபடி செய்யப்பட்டு, மேற்படி தீர்ப்பு உறுதி செய்யப்பட்டது.அதன்பேரில் நீதிமன்ற பிணையில் இருந்த குற்றவாளி யூசுப் என்பவர் எழும்பூர், தலைமை பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார்.

# ஓட்டல் ஊழியரிடம் செல்போன் பறிப்பு: ஒருவர் கைது

**சென்னை செப் 19**

சென்னை, ஆயிரம் விளக்கு பகுதியில் வசித்து வரும் சக்திவேல், என்பவர் எழும்பூர் பகுதியிலுள்ள ஒரு ஓட்டலில் ரூம் பாயாக வேலை செய்து வருவதாகவும், சக்திவேல், கடந்த 3 ந் தேதி அன்று இரவு அவரது நண்பருடன் சைக்கிளில் வீட்டிற்கு சென்று கொண்டிருந்தபோது, இருசக்கர வாகனத்தில் வந்த 2 பேர் சக்திவேல் கையில் வைத்திருந்த செல்போனை பறித்துக் கொண்டு தப்பிச் சென்றதாக கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். மேற்படி செல்போன் பறிப்பு சம்பவத்தில் ஈடுபட்ட எதிரி வசந்தகுமார், என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து புகார்தாரரின் செல்போன் மீட்கப்பட்டு, குற்றச் செயலுக்கு பயன்படுத்திய டியோ இருசக்கர வாகனம் பறிமுதல் செய்யப்பட்டது.விசாரணையில் எதிரி வசத்நகுமார், தலைமைச் செயலக குடியிருப்பு காவல் நிலைய சரித்திர பதிவேடு குற்றவாளி என்பதும், இவர் மீது ஏற்கனவே 7 குற்ற வழக்குகள் உள்ளதும் தெரியவந்தது.



ஈரோடு மாநகராட்சிக்கு உட்பட்ட புதிய பேருந்து நிலையம் கட்டுமானப் பணி மற்றும் சிக்கய்ய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கட்டுமானப் பணியை அமைச்சர் சு. முத்துசாமி மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் ப.செல்வராஜ் நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ்,கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி சி சந்திரகுமார் ஆகியோர் பார்வையிட்டனர். உடன் ஈரோடு மாநகராட்சி, திமுக மாநில, மாவட்ட, மாநகர, பகுதி, வட்ட நிர்வாகிகள் மற்றும் சார்பு அணியினர் கலந்து கொண்டனர்.

## நீலகிரி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்: கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தலைமையில் நடைபெற்றது



**ஊட்டி, செப்.19-**

நீலகிரி மாவட்ட கூடுதல் கலெக்டர் அலுவலகத்தில், விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தலைமையில் நேற்று நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாவட்ட கலெக்டர் தெரிவித்ததாவது :

வேளாண் அறிவியல் மைய அலுவலர்களிடம், கூடலூர் மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு நெல் பயிர் தொடர்பான தொழில் நுட்ப பயிற்சி வழங்கவும், நீலகிரி கூட்டுறவு சங்கத்திற்கு, விவசாயிகளுக்கு பூண்டு உலர்த்த இட வசதி (கிடங்கு) ஏற்படுத்தி தருமாறும், இணைப்பதிவாளரிடம் வேளாண்;மை கூட்டுறவு கடன் சங்கங்களில் நிலுவையில் உள்ள பயிர் கடன் விண்ணப்பங்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறும், மேலண்மை இயக்குநர், இன்கோ சர்வ் அவர்களிடம் கூட்டுறவு தொழிற்சாலையில் குடும்ப காப்பீடு திட்டத்தின் கீழ் மரணமடைந்த உறுப்பினர்களின் குடும்பத்திற்கு சென்றடைந்த தொகையின் விவரத்தினை சமர்ப்பிக்குமாறும், மாதந்தோறும் முதல் வெள்ளிக்கிழமை அன்று விவசாயிகளுக்கான குறைத்தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட வனத்துறை அவர்களால் நடத்தப்பட வேண்டும் எனவும், மேலும், விவசாயம் தொடர்பான அனைத்து கோரிக்கைகளுக்கும் விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட கலெக்டர் தெரிவித்தார்.முன்னதாக, மாவட்ட கலெக்டர் வேளாண் தோட்டக்கலை மற்றும் இதர துறைகளின் திட்டங்கள் மற்றும் தொழில் நுட்ப விளக்கங்கள் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், விவசாயிகளுக்கு வேளாண் செய்தி மடல் - செப்டம்பர் 2025 கையேட்டினையும், தோட்டக்கலைத் துறை சார்பில் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு இயற்கை விவசாயம் குறித்து அளிக்கப்பட்ட பயிற்சி வகுப்பில் கலந்து கொண்ட நபர்களுக்கு சான்றிதழ்களையும் வழங்கினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் சித்ரா, தோட்டக்கலை இணை இயக்குநர் எஸ்.ஷிபிலாமேரி உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



தமிழ் மாநில காங்கிரஸ் மாநில செயற்குழு உறுப்பினர் வேளாளர் கல்லூரி தாளாளர் எஸ் டி சந்திரசேகர் பிறந்தநாள் விழாவில் கேக் வெட்டி நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாநில பொதுச் செயலாளர் யுவராஜ், மாநில துணைத்தலைவர் விடியல் சேகர் மாவட்ட தலைவர் விஜயகுமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

ஊட்டியில்

## ரசாயன உரங்களின் பயன்பாட்டால் சீரழிந்துள்ள மண்வளத்தை மீட்டெடுக்க விவசாயிகளுக்கு விழிப்புணர்வு கருத்தரங்கு

ஊட்டி, செப்.19-

ரசாயன உரங்களின் பயன்பாட்டால் சீரழிந்துள்ள மண்வளத்தை மீட்டெடுக்க விவசாயிகளுக்கு; விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் ஊட்டியில் கருத்தரங்கு நடைபெற்றது.

கடந்த 50 ஆண்டுகளுக்கு முன்பு வரை இயற்கை விவசாயம் மட்டுமே மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் உணவுப் பொருட்கள் தேவையை அதிகரிக்க பசுமை புரட்சி ஏற்படுத்தப்பட்டு ரசாயன உரங்கள் பயன்பாடு அதிகரித்தது. இதனால், மனித உழைப்பு குறையும், கால விரயம் தவிர்க்கப்படும், குறுகிய காலத்தில் அதிக விளைச்சல் கிடைக்கும் என்பன போன்ற காரணங்கள் கூறப்பட்டன. ரசாயன உரங்களால் விவசாய உற்பத்தி அதிகரிக்கவில்லை. மாறாக, குறைந்து கொண்டே வருகிறது .

விவசாய உற்பத்தியை அதிகரிக்கச் செய்ய ரசாயன உரங்களின் பயன்பாடு பன்மடங்கு அதிகரித்துள்ளது. மேலும், பூச்சிக்கொல்லி மருந்துகளும் அதிக அளவில் பயன்படுத்தப்படுகின்றன. இதனால் நிலத்தில் ரசாயன பாதிப்பு அதிகரித்து மண்வளம் கெடுகிறது பூச்சிகள் பாதிக்கப்பட்டு சுற்றுச்சூழல் பாதிக்கப்படுகிறது காய்கறிகளை பயன்படுத்தும் மனிதர்களுக்கும், செடிகளை உட்கொள்ளும் கால்நடைகளுக்கும் பாதிப்பு ஏற்படுகிறது.

இதனால் விவசாயிகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி தாய் மண்ணின் வளத்தை மீட்டெடுக்கும் நோக்கில் மத்திய அரசு சார்பில் நாடு முழுவதும் கிசான் சங்கோஷ்டி எனப்படும் விவசாயிகள் கருத்தரங்கு நாடு முழுவதும் நடத்தப்பட்டு வருகிறது. அந்தவகையில்; நீலகிரி மாவட்டம் ஊட்டியில் தோட்டக்கலை அரங்கத்தில் விவசாயிகள் கருத்தரங்கு நடைபெற்றது.மத்திய அரசின் மெட்ராஸ் உர நிறுவனம் சார்பில் நடத்தப்பட்ட இந்த கருத்தரங்கில் தோட்டக்கலைத்துறை இணை இயக்குனர் சிபிலாமேரி, விஞ்ஞானி வினோத், மெட்ராஸ் உர நிறுவன மண்டல மேலாளர் கணபதி ஆகியோர் கலந்துகொண்டு ரசாயன உரங்கள் பயன்பாட்டால் மண்ணில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள், விளைவிக்கும் பயிர்களில் உள்ள நச்சுத்தன்மை, இயற்கை உரங்களை பயன்படுத்தி தாய் மண்ணின் வளத்தை மீட்டெடுக்கும் முறைகள் குறித்து எடுத்துரைத்தனர். இந்தக் கருத்தரங்கில் நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த ஏராளமான விவசாயிகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். இந்தக் கருத்தரங்கு தங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்ததாக விவசாயிகள் தெரிவித்தனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
Old No:5, New No: 9, kannan Street, Korukkupet, Chennai - 600021.
Ph: 044-25952015,9842165236
E-Mail: chennaiedi@thinaboomi.com
RNI.Regn No.55306/93
Editor:MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

ஈரோடு மாவட்டம் சென்னிமலையில்

# கைத்தறி பூங்கா அமைக்கும் பணி: அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன்,ஆர்.காந்தி துவக்கி வைத்தனர்



ஈரோடு,செப்.19-

ஈரோடு மாவட்டம், சென்னிமலையில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் மற்றும் கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் ஆர்.காந்தி ஆகியோர் சென்னிமலையில், ரூ.2.50 கோடி சிறிய அளவிலான கைத்தறி பூங்கா அமைக்கும் பணியினை துவக்கி வைத்து மற்றும் ரூ.35.00 இலட்சம் மதிப்பீட்டில் மெல்லிய மெத்தைகள் தைக்கும் இயந்திரத்தின் பயன்பாட்டினை துவக்கி வைத்தார்கள்.இவ்விழாவில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர்தெரிவித்ததாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் பல்வேறு திட்டங்கள் அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். கொங்கு மண்டலத்தில் கைத்தறி தொழில் முக்கிய தொழிலாக இருந்து வருகிறது. அந்த வகையில் இன்றைய தினம் சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், முருங்கத்தொழுவு கிராமத்தில் சிறிய அளவிலான கைத்தறி பூங்கா அமைக்கும் பணி துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்த கைத்தறி பூங்காவின் மூலம் விவசாயத்திற்கு இணையாக நெசவாளர்களை அதிக அளவில் உள்ள சென்னிமலை பகுதி மிகுந்த வளர்ச்சியடையும். எனவே நெசவுத்தொழிலை நம்பியுள்ள குடும்பங்கள் பெரும் அளவில் பயன்பெறுவதோடு வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் உதவியாக இருக்கும்.

மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் மகளிர் சுய உதவிக்குழு கடன்கள், 70 வயதிற்கு மேல் உள்ளவர்களுக்கு வீடு தேடி நியா ய வி லைக் கடை பொருட்கள் வழங்கும் தாயுமனவர் திட்டம், பெற்றோர்களில் இருவர் அல்லது ஒருவரை இழந்த குழந்தைகளுக்கு மாதம் ரூ.2000/- கல்வி உதவித்தொகை வழங்கும் அன்புக்கரங்கள் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சென்னிமலை பகுதியில் பல்வேறு சாலைப்பணிகள், கூட்டுக்குடிநீர் திட்டம், போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில் புறவழிச்சாலை, மலைப்பாதை அகலப்படுத்தும் பணி என பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என தெரிவித்தார்

இவ்விழாவில், கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் தெரிவித்தாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் பிற மாநிலங்கள் பின்பற்றுகின்ற வகையில் திட்டங்கள் அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள்.

அந்த வகையில் பஞ்சாப் மாநில முதலமைச்சர் தமிழகத்திற்கு வருகைபுரிந்து முதலமைச்சரின் காலை உணவு திட்ட விரிவாக்க நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, இத்திட்டத்தை தங்கள் மாநிலத்திலும் செயல்படுத்த நடவடிக்கை எடுப்பதாக கூறியுள்ளார்.

மேலும், நெசவாளர்கள் பன்பெறு வகையில் அவர்களுக்கு கலைஞர் கனவு இல்லம், மின்சார கட்டணத்தில் சலுகை உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் வழங்கி வருகிறார்கள்.

அந்த வகையில் இன்று கைத்தறி பொருட்களின் தரத்தை உயர்த்தவும், நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தவும், சந்தைப்படுத்தும் வாய்ப்புகளை ஏற்படுத்தவும் 20 கோடி ரூபாய் செலவில் 10 சிறிய கைத்தறி பூங்காக்கள் அமைக்கப்படும்" என்ற அறிவிப்பின்படி ஈரோடு மாவட்டம் சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், முருங்கத்தொழுவு கிராமத்தில் ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் சிறிய அளவிலான கைத்தறி பூங்கா அமைக்கும் பணி துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்த கைத்தறி பூங்கா 65,369 சதுர அடி பரப்பளவு இடத்தில் 8,191 சதுர அடி கட்டிட பரப்பளவில் அமையவுள்ளது. மொத்தமாக 50 தறிகள் அமைக்கப்பட்டு அதன் மூலம் ஏற்றுமதி இரகம் மற்றும் மதிப்புக் கூட்டப்பட்ட இரகங்களை தயாரிப்பதற்கு உயர்தர பருத்தி இரக துணிகளை கைத்தறி பூங்காவில் உற்பத்தி செய்வதன் மூலம் நெசவாளர்களுக்கு அதிகளவிலான கூலி மற்றும் நேரடியாகவும் மற்றும் மறைமுகமாகவும் தொடர் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.

கைத்தறி தொழிலை குடிசை தொழிலிருந்து தொழில் துறை முறைக்கு மாற்றவும், ஆண்டு முழுவதும் நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கவும், நெசவாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியமாக நாள் ஒன்றுக்கு ரூ.700/- வழங்கிட உறுதி செய்யவும், இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு உத்தரவாதத்துடன் கைத்தறி நெசவு பயிற்சி வழங்குவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

தற்போது, மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன், தாயுமானவர், அன்புக்கரங்கள், நம்மைக் காக்கும் 48, மக்களைத் தேடி அரசு என்ற வகையில் உங்களுடன் ஸ்டாலின் என்ற மகத்தான திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள் என தெரிவித்தார்.

தொடர்ந்து, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மற்றும் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆகியோர், ஈரோடு பகுதியில் உள்ள நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் பயன்பாட்டிற்கு மெல்லிய மெத்தைகள் தைக்கும் இயந்திரம் (Quilt Stitching Machine) நிறுவப்படும் என்ற அறிவிப்பின்படி, ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், காளிக்காவலசு தொடக்க மற்றும் தொழிலியல் சங்கத்தில் ரூ.35.00 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள மெல்லிய மெத்தைகள் தைக்கும் இயந்திரத்தினை (Quilt Stitching Machine) பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார்கள்.

இதன் மூலம் மிகவும் துல்லியமான அளவுகளிலும் சேதாரம் இல்லாமலும் மெல்லிய மெத்தைகள் வடிவமைப்பு செய்ய இயலும். சென்னிமலை பகுதியில் 20 கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள் மெல்லிய மெத்தைகள் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகிறது.

இந்த மெல்லிய மெத்தை தயாரிக்க கரூர் எடுத்துச் சென்று அங்குள்ள இயந்திரத்தின் மூலம் தைத்து எடுத்து வந்து விற்பனை செய்து வந்தார்கள். தற்போது, சென்னிமலை பகுதியில் இயந்திரம் நிறுவப்பட்டுள்ளதால் இப்பகுதி நெசவாளர்கள் பெரிதும் பயனடைவார்கள்.

இந்நிகழ்ச்சிகளில், அரசு செயலாளர் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை) வே.அமுதவள்ளி இயக்குநர் (கைத்தறித் துறை) மகேஸ்வரி ரவிக்குமார் ஈரோடு கலெக்டர் ச.கந்தாசமி இணை இயக்குநர் (கைத்தறி) கணேசன், உதவி இயக்குநர் (கைத்தறித்துறை) சரவணன் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள், நெசவாளர்கள் கலந்து கொண்டனர்.

## ஊட்டி பாரத ஸ்டேட் வங்கியின் 159-வது ஆண்டு விழா: முதன்மை மேலாளர் ரமேஷ்பாபு தலைமையில் நடைபெற்றது



ஊட்டி, செப்.19-

ஊட்டி பாரத ஸ்டேட் வங்கியின் 159 ஆவது ஆண்டு விழா, முதன்மை மேலாளர் ரமேஷ்பாபு தலைமையில் நடைபெற்றது.

நீலகிரி மாவட்டம்ஊட்டியில் உள்ள பாரத ஸ்டேட் வங்கி நூற்றாண்டு பழமை வாய்ந்த ஒரு வங்கியாகும். பாரம்பரிய கட்டிடத்தில் இயங்கி வரும் இவ்வங்கியானது கடந்த 17.09.1866 அன்று துவங்கப்பட்டு இன்றுடன் (17-ந் தேதியுடன்); 159 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது. இதனை சிறப்பிக்கும் வகையில் வங்கி வளாகத்தில் 159-வது ஆண்டு விழா இன்று மாலை நடைபெற்றது. விழாவில் வங்கியில் முதன்மை மேலாளர் ரமேஷ் பாபு தலைமை தாங்கி பேசுகையில், ஊட்டி பாரத ஸ்டேட் வங்கியின் வாடிக்கையாளர்களான தங்களின் சேவைகளை பூர்த்தி செய்வதில் நாங்கள் மிகவும் கடமைப்பட்டுள்ளோம். எங்களது வங்கியில் வாடிக்கையாளர்களாக உள்ள அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் எங்களது நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம் என்றார். இந்நிகழ்ச்சியில் வங்கியின் மேலாளர்கள் வாடிக்கையாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். விழாவில் கலந்து கொண்ட வாடிக்கையாளர்கள் ஊட்டி பாரத ஸ்டேட் வங்கியின் சேவை சிறப்பாக உள்ளதாகவும், இந்த வங்கியில் வாடிக்கையாளர்களாக இருப்பதில் பெருமை கொள்வதாகவும், இது போன்ற விழாக்களில் எங்களை அழைத்து பெருமைப்படுத்தியதற்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம் என்று கூறினர்.

முடிவில் துணை பொது மேலாளர் நன்றி கூறினார்.

ஊட்டி, பந்தலூரில் இன்று

## உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நடக்கும் இடங்கள்:கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு அறிவிப்பு

**ஊட்டி, செப்.19-**

நீலகிரி மாவட்டத்தில் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாமானது கடந்த 15.07.2025 முதல் துவங்கப்பட்டு, உதகமண்டலம், குந்தா, கோத்தகிரி, குன்னூர், கூடலூர் மற்றும் பந்தலூர் ஆகிய வட்டங்களுக்குட்பட்ட நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் கிராம ஊராட்சிகள் வாரியாக முதற்கட்டம் மற்றும் இரண்டாம் கட்டமாக மொத்தம் 109 முகாம்கள் நடைபெற்றது.

அதனைதொடர்ந்து, நீலகிரி மாவட்டத்தில், மூன்றாம் கட்ட'உங்களுடன் ஸ்டாலின்'திட்டமுகாம் எதிர்வரும் 16.09.2025 முதல் 14.10.2025 வரை உதகமண்டலம், குந்தா, குன்னூர், கூடலூர் மற்றும் பந்தலூர் ஆகிய வட்டங்களுக்குட்பட்ட நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் கிராம ஊராட்சிகள் வாரியாக முகாம் நடைபெற்று வருகிறது.

அதன்படி, இன்று (19.09.2025) நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட வார்டு 8, 9 மற்றும் 18-ற்கான முகாம் பந்தலூர் பாரீஸ் ஹாலிலும், பந்தலூர் வட்டம். சேரங்கோடு கிராம ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கான முகாம் அய்யன்கொல்லி சர்ச் ஹாலிலும், உதகமண்டலம் வட்டம், தூனேரி கிராம ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கான முகாம் அணிக்கொரை சமுதாய கூடத்திலும் நடைபெறவுள்ளது.

மேற்படி நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி பகுதிகளில் நடைபெறும் முகாம்களில் அனைத்து பகுதிகளையும் உள்ளடக்கி நடைபெறுவதால், தங்கள் பகுதிக்குச் சென்று ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பகுதியில், அமைந்துள்ள முகாம்களில் மட்டும் கலந் துக் கொண்டு, கோரிக்கை விண்ணப்பம் அளிக்குமாறு பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

எனவே, உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தில் தங்களது பகுதிகளில் நடைபெறும் முகாம்களில் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தெரிவித்துள்ளார்.

தின பூமி
நாளிதழ்
படியுங்கள்

**ENROLLMENT NOTICE**

After 10 days of the publication of this notice and within Three months thereafter. I, T.Karthick,S/O A. Thirunavukarasu Aged: 37 years Permanently residing at Door No. 95/1 Sri Rangammal street. Old Washermanpet. chennai distric.pin 600021 Tamilnadu.
Intend to have my enrolment as an advocate moved before the Bar Council of Tamil Nadu, Bar Council Buildings High Court Campus, Chennai - 104. Those who have any valid objections may notify the same to the Bar Council within 10 days.

T.Karthick

**தவறிவிட்டது**

நான் கடந்த 12-09-2025 அன்று கூடுவாஞ்சேரி சார் பதிவாளர் அலுவலகம் அருகே நின்றபோது 2014ம் ஆண்டு, தஞ்சாவூர் PRIST பல்கலைக்கழத்தில் எம்டெக் படித்த ஒரிஜினல் டிகிரி சான்றுகள் (APPLIED ELECTRONICS - 2014) பதிவு எண். 21092710004 தவறிவிட்டது கண்டுடெடுத்தவர்கள் எனது முகவரிக்கு தெரிவிக்கவும்.

Mr. BALAKRISHNAN,
S/0, RAMALINGAM,
6E-PARK AVENUE TOWER
5, VUAY SHANTHI APARTMENTS-
Kandigai. 600048
Moble No: 8625022160

BEFORE THE HON'BLE ADDITIONAL DISTRICT JUDGE III
AT POONAMALEE
E.P.No.60 OF 2022 IN
AP.NO.1951/2020

M/s. Visage Holdings and Finance Pvt. Ltd.
Rep by its Regional Legal Manager,
Mr. Raguraman, S/o. R.Rajendran,
Having its registered office inter alia at,
No50, 2nd Floor,100 Feet Road, Hal 2nd Stage,
Indira Nagar, Bangalore – 560 038.
.... Petitioner/Claimant
Vs.
M/sGurudev Rexine and others
... Respondents/ Respondents
To
J.D.2.Mr.Sandeep Jain Vinayrai
S/o.Vinayaraj
Plot No.1, F1 SF No.78/1C, 78/1B,
4th Street, Aiswarya Nagar,
Ayanambakkam,
Maduravoyal, Thiruvallur- 600 095.
... 2nd Respondent / 2nd Respondent

The above E.P.No.60 of 2022 filed by the Petitioner against you for Arrest for a sum of Rs.14,31,296 /- together with interest for non satisfaction of award amount. The above matter came up on 25.08.2025 before the Hon'ble Additional District Judge III at Poonamallee was pleased to order to notice to you by way of Paper publication returnable by 24.10.2025. You are hereby given notice to appear before the Additional District Judge III at Poonamallee on 24.10.2025 at 10.30 a.m in person or through your pleader without fail otherwise the matter will be decided ex-parte.

M/s. T. MUTHAMILSELVI M.A.,M.L.,
Counsel for Petitioner

IN THE COURT OF XVI ASSISTANT CITY CIVIL JUDGE AT CHENNAI.
O.S.No. 2181 of 2025

M/s. Vijay Finance,
represented by its Proprietor Mr. Kamalesh,
---Plaintiff
Versus
Mr. C.Koteeswaran,
& another
---Defendants
To
1. Mr. C.Koteeswaran,
S/o. Chellaiah,
Residing at No.135/2, West Colony,
ICF, Chennai – 600 038.
2. Mr. A. Donbosco,
S/o. Arumainathan,
No. 23/4, Lake View Apartments,
1st Street, North Thirumalainagar,
Villivakkam, Chennai – 600 049.

Please take notice that the Plaintiff had filed the above O.S for a recovery of a sum of Rs.1,30,000 with interest at the rate of 24 per cent on the amount of Rs. 1,00,000/- from the date of plaint till the date of realization; H.H. The Learned XVI Assistant City Civil Judge, Chennai had ordered a paper publication to you, returnable by 25-09-2025.
Please make it convenient to be present in the said Court, on the said day at 10.30 A.M, without fail, failing which the matter will be heard and decided in your absence.

S.BHUVANESWARAN
Counsel for Plaintiff

II Judge
BEFORE THE MOTOR ACCIDENTS CLAIMS TRIBUNAL, CHENNAI
M.C.O.P.No. 511 of 2025.

Ramasamy
....Petitioner.
-Vs-
1) Parthiban P
2) CHOLA MS GENERAL INSURNCE CO.LTD.,
....Respondents.
To,
Parthiban P
No. 1/839,
Thiruvalluvar Salai,
Bethel Nagar, Injambakkam,
Chennai – 600115.

Take notice the above said matter was posted on 16.10.2025 for your appearance before the Hon'ble II Judge court of small causes. Kindly make arrangements to appear that day either by you or your counsel on that day at about 10.30 AM other wise matter will be decided in your absence.

S. ABISHIEK
Counsel for Petitioner

**ENROLLMENT NOTICE**

After 10 days of the publication of this notice and within Three months thereafter. I, Gunarethinam.C, S/O: P chinnakunju Aged: 56 years Permanently residing at Door No. 893 Parivettai street. Thirunagari. Thirunagari,post sirkali (T.k) mayiladuthurai distric.pin609106. Tamilnadu.
Intend to have my enrolment as an advocate moved before the Bar Council of Tamil Nadu, Bar Council Buildings High Court Campus, Chennai - 104. Those who have any valid objections may notify the same to the Bar Council within 10 days.

Gunarethinam.C

**பொது அறிவிப்பு**

எனது கட்சிக்காரர்களான சென்னை-600062, வெள்ளானூர், கன்னடப்பாளையம். பிள்ளையார் கோவில் தெரு. எண்.8/10, என்ற விலாசத்தில் வசிக்கும் திரு.K.சந்தோஷ் த/பெ. திரு. கிருஷ்ணன் மற்றும் திருமதி. V.V ஷீனி க/பெ திரு. திரு.K.சந்தோஷ் ஆகிய இருவரும் சேர்ந்து இந்த பொது அறிவிப்பு மூலம் பொது மக்களுக்கு தெரிவிப்பது என்னவென்றால் திருவள்ளூர் மாவட்டம், ஆவடி வட்டம் கோவில்பதாகை கிராமம், சர்வே எண் 172/2. க்கு ஆவடி நகர அளவை நிலப்பதிவேட்டின்படி (Town Survey) வார்டு C. பிளாக் நெ. 17, T.S.No.1/48, பழைய சர்வே எண்.172/2Apart -ல் அடங்கிய மொத்த லிஸ்தீரணம் பத்திரப்படி ஏ.0.62 செண்ட் பட்டா படி ஏ.0.69 செண்ட் விஸ்தீரணம் கொண்ட நிலத்தில் ஒரு பகுதியான கிழக்கு பக்கம் 24.1 செண்ட் விஸ்தீரணம் கொண்ட நிலமானது திரு. R. பாபு அவர்களுக்கு, 24.03.2025 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவண எண். 4234/2025, SRO. அம்பத்தூர், ஆவணம் மூலம் கிடைக்கப்பெற்று, இந்த நிலத்தை AL முதல் A7 என்ற 7 வீட்டு மனைகளாக பிரித்து PP.NO.153/2025/F2.Dated 23.4.2025 என இந்த மனை பிரிவிற்கு அங்கிகாரம் பெற்றதில் அதில் மனை எண். A7-க்கு 1017 சதுரடி கொண்ட காலி மனை சொத்தை திரு.பாபு அவர்களிடம் இருந்து எனது கட்சிக்காரர்கள் கிரையம் வாங்க உள்ளனர். யாருக்கேனும் இந்த நில சொத்து பொறுத்து ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு வந்ததிலிருந்து 7 நாட்களுக்குள் உரிய ஆதாரங்களுடன் எழுத்து மூலமாக எனக்கு தெரிவிக்க வேண்டியது. அதற்கு பிறகு வரும் எந்த ஆட்சேபனையும் எனது கட்சிக்காரர்களை எந்த விதத்திலும் கட்டுபடுத்தாது என்று இந்த பொது அறிவிப்பு மூலம் என்னுடைய கட்சிக்காரர்களின் சார்பாக தெரிவித்து கொள்கின்றேன்.

R.ராஜாமணி M.A.B.L
வழக்குரைஞர்
எண்.449, 4வது தளம், புதிய கூடுதல் வழக்கறிஞர்கள் வளாகம், உயர்நீதிமன்றம், சென்னை-104.

